OS.No. 53/2020

Date : 19.01.2026

Witness Name & Rank – சபாபதி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தற்போது எங்கு குடி உள்ளேன் என்றால் வடுகபாளையத்தில் குடியுள்ளேன். எவ்வளவு காலமாக மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் எட்டு ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். எனது தாயார் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயாரும் எட்டு ஆண்டுகளாக என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் வடுகபாளையத்தில் வசிப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வருகிறேன். மேற்படி கம்பெனியின் பெயர் எதுவென்றால் Giriyas Apparels ஆகும். மேற்சொன்ன கம்பெனி எங்கு உள்ளது என்றால் திருப்பூர் கல்லாங்காட்டில் உள்ளது. கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது எவ்வளவு காலமாக அந்த கம்பெனியில் பணியாற்றி வருகிறேன் என்றால் ஒரு மாதமாக பணியாற்றி வருகிறேன்.
2. அதற்கு முன்பு எந்த நிறுவனத்தின் பணியாற்றினேன் என்றால் இதே நிறுவனத்தில் தான் ஆனால் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகிறேன். நான் வருமான வரி செலுத்துபவனா என்றால் இல்லை. நான் மேற்சொன்ன நிறுவனத்தின் பணியாற்றுவதை காட்ட எனது மாத சம்பளம் அறிக்கை தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. மேற்படி நிறுவனத்தில் பணியாற்றுவதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் இல்லை. எனது தந்தை எப்போது காலமானார் என்றால் எனது ஐந்து வயதில் காலமானார். சிறுவயது முதலே என்னையும் எனது சகோதரியை எனது தாயார் தான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான்.எனக்கு என்ன சொத்து உள்ளது என்றால் எனக்கு ஒரு வீடும் வீடு கட்டுவதற்கான ஒரு பிளாட்டும் உள்ளது. எனக்கு தோட்டம் நிலங்கள் இல்லை என்றால் சரிதான்.
3. எனது தாயாருக்கு தனிப்பட்ட வருமானங்கள் எதுவும் இல்லை என்றால் முதலில்

ஆடு மாடுகள் இருந்தது அதன் பிறகு வீடு கட்டியதால் வாடகை வருகிறது. வாடகை மூலம் எவ்வளவு பணம் வருகிறது என்றால் 15 ஆயிரம் வருகிறது. பொதுவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளித்தால் அதற்கு சட்டப்படி நடவடிக்கை உண்டு என்றால் சரிதான். எனக்கு வரவு செலவு பைனான்ஸ் செய்வது ஒரு தொழில் என்றால் சரியல்ல.நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு பைனான்ஸ் தொழில் செய்வது மூலம் சிறு சிறு பிரச்சனைகள் எனக்கு வருவது உண்டு என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றும் அவ்வாறு பைனான்ஸ் தொழிலில் எனக்கு வரா கடன் தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை. அவ்வாறு நான் வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் அது தொடர்பான ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் கொசவம்பாளையத்தில் உள்ளது நீதிமன்ற வளாகத்தில் இருந்து சுமார் 1 ½ கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் இல்லை மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதுநான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் மேற்படி கொசுவம் பாளையமானது நீதிமன்ற வளாகத்தில் இருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கொசுவம் பாளையம் கிராமம் பல்லடம் நகராட்சி எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரனம் என்றால் ஒரு ஏக்கர் 21 சென்ட் நிலம் ஆகும். மேற்படி ஒரு ஏக்கர் 21 சென்ட் நிலத்தில் நிலமாக எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் ஒரு ஏக்கர் உள்ளது. மீதி உள்ள நிலம் எவ்வகையில் உள்ளது என்றால் கிணறு தடம் உள்ளது.

5. மேற்படி ஒரு ஏக்கர் நிலத்தில் என்ன விவசாயம் செய்யப்பட்டு இருந்தது என்றால் தென்னை மரம் இருந்தது. எனக்கு வழக்கு சொத்து எவ்வாறு தெரிய வந்தது என்றால் நிலத்தரகர் நீலமேகம் என்பவர் மூலம் தெரிய வந்தது. தென்னை மரங்கள் உள்ளது தொடர்பாக எழுதப்பட்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக வழக்கறிஞருக்கு யார் கருத்துரு சொன்னது என்றால் நானும் எனது தாயாரையும் சொன்னோம் எனவே நான் தாக்கல் செய்துள்ள

பிராதிலும் வழக்கு சொத்து தென்னை மரம் உள்ளதை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பு வழக்கு சொத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு பார்த்தேன். வழக்கு சொத்தை சுற்றி மனை பிரிவுகள் உள்ளது என்றால் ஒரு பக்க எல்லையில் மட்டும் மனை பிரிவுகள் இருந்தது. மேற்படி மனை பிரிவில் ஒரு மனை எவ்வளவு தொகைக்கு விற்பனைக்கு சென்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. பொதுவாக ஒரு நபர் சொத்தை வாங்க முற்பட்டால் அதற்கு அருகாமையில் உள்ள விற்பனையில் உள்ள நிலங்களின் தொகையை தெரிந்த பிறகே வாங்க முற்படுவார் என்றால் சரிதான். அவ்வாறு நான் விசாரித்த போது அருகாமையில் உள்ள நிலங்களின் மதிப்பு எனக்கு தெரிய வந்ததா என்றால் நான் விசாரிக்கவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகாமையில் எஸ் கே டி நிறுவனத்தின் ஆலை உள்ளது என்றால் தெரியாது. கிரையம் செய்வது தொடர்பாக நான் பிரதிவாதியை நேரில் அணுகி பேசினேனா என்றால் கிரைய ஒப்பந்தம் செய்து இரண்டு மாதங்கள் கழித்து சென்று விசாரித்தேன் அப்போது பிரதிவாதி மேற்படி வழக்கு சொத்தை அளந்து கிரயம் எழுதி வைப்பதாக சொன்னார். அவ்வாறு மேற்சொன்ன சங்கதி தொடர்பாக எனது பிராதிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்வழக்கு சொத்தானது கொசவம்பாளையத்தில் மேல் ஒட்டி மேற்கு புற சொத்து என்றால் சரிதான்.

7. மேற்படி வழக்கு சொத்தில் கிழக்கு பக்கம் தறி குடோன் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் வீடும் அதில் இருந்து வடக்கு பக்கம் தறி குடோனும் உள்ளது. மேற்படி தடம், கிணறு எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் 375 ல் உள்ளது, உட்பிரிவு சரியாக ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தம் செய்த பிறகு கிரையம் எழுதுவதற்கு தயாராக உள்ளதாக எனது தாயார் மூலம் சட்ட அறிவிப்பு செய்த நிலையில் மேற்படி கிரயத்தை பதிவு செய்ய டோக்கன் போடப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லி உள்ள நிலையில் மேற்படி டோக்கன் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் யாரால் தயாரிக்கப்பட்டது என்றால் ஜானகி டைப் ஆபிஸில்

தயாரிக்கப்பட்டது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைவு கிரைய பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

8. நான் வழக்கில் சொல்லி உள்ளது போல் எந்த ஒரு வரைவு கிரைய பத்திரம் தயாரிக்கவில்லை அதேபோல் பதிவுத்துறை அலுவலகத்தில் டோக்கன் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தில் எவ்வளவு தென்னை மரங்கள் இருந்தது என்றால் சுமார் 100 மரங்களுக்குள் இருக்கும். மேற்படி கிணற்றில் பிரதிவாதிக்கு எவ்வளவு பங்கு உரிமை என்றால் ஐந்தில் ஒரு பங்கு உரிமை ஆகும். மேற்படி வழக்கு சொத்திற்கு அருகில் CTC டிப்போ உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து நான் கிரயம் செய்ய முற்பட்டபோது அரசு வழிகாட்டு மதிப்பு எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக கிரையமானது அரசு வழிகாட்டு மதிப்பின் அடிப்படையிலேயே பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தில் கிரைய ஒப்பந்த சமயத்தில் அரசு வழிகாட்டி மதிப்பானது ஒரு ஏக்கருக்கு 10 இலட்சத்து 5 ஆயிரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. நான் உண்மையில் கிரைய செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதியை அணுகி கிரைய ஒப்பந்தம் செய்திருந்தால் நிச்சயம் அரசு வழிகாட்டி மதிப்பு தொடர்பாக எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரி இல்லை. பிரதிவாதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் என்றால் சரிதான் மேற்படி நான் கிரைய ஒப்பந்தம் செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் பிரதிவாதியின் இரண்டு பெண் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் மூத்த பெண் திருமணம் முடிந்து கை குழந்தையுடன் இருந்தார் இரண்டாவது பெண் திருமணம் செய்யாமல் வீட்டில். இருந்தார். மேற்படி பிரதிவாதிக்கு முதல் மகளின் திருமணத்ததாலும் மகப்பேறு வைத்தியாத்தாலும் பல கடன்கள் இருந்தது, அந்த கடனை தீர்க்க வேண்டி தரகர் நீலமேகம் மூலமாக என்னிடம் நிதி உதவிக்கு அணுகி அதன் பேரில் நான் பிரதிவாதிக்கு 5 லட்சம் கடன் கொடுத்து பாதுகாப்பிற்காக பல லட்சம் மதிப்புள்ள வழக்கு சொத்தை எனது தாயாரின் பேரில் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு மேற்படி வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டி பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் பெற்ற ரூ. 5 லட்சம் கடன் தொகையை தற்போதும் நியாய வட்டியின் அடிப்படையில் எங்களுக்கு திருப்பி

தர சம்மதிக்கிறார் என்றால் நான் நிலத்தை கிரைய செய்யவே கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டேன். தாவா சொத்து செண்ட் ஒன்று 5 லட்சத்திற்கு மேல் செல்கிறது என்றால் சரியல்ல.

10. எனவே சொத்து மதிப்பு கோடி கணக்கில் உள்ளது, வழக்கிற்காக அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அடமான கடன் பத்திரம் எழுதுவதாக சொல்லி கிரைய ஒப்பந்தம் போலியாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. கொரேனா காலத்தில் வட்டி செலுத்த முடியாததால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு எந்த வருமானமும் இல்லை, நான் பணம் கொடுத்து எனது தாயார் பெயரில் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தம் மணம் ஒத்து கிரையம் செய்வதற்காக எழுதப்பட்டது அல்ல எனவே ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கததல்ல என்றால் சரியல்ல. எனது தாயாருக்காக நான் அளிக்க கூடிய சாட்சி ஏற்றுக்கொளளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B..L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.